ப்ரஹ்மவித்யா

ப்ரம்மவித்தியா பத்திரிகை

பிரதி இங்கிலீஷ்மீ ௴ ௨ சிதம்பரத்திலிருந்து பிரசுரம் செய்யப்படும்.

புத்தகம் - ௪.] ௧௮௮௬ - ஸூ அக்டோபர்மீ ௴ - ௨. [இலக்கம் - ௫

ஹிந்துதேஶஸ்ய				மூல்யாநி		
ஸாம்வத்ஸரஸ்ய	௧	௰௨	,,	௨	௪	,,
ஷாண்மாஸ்யஸ்ய	௧	,,	,,	௧	௪	,,
த்ரைமாஸிகஸ்ய	,,	௯	,,	,,	௰	,,
ஏகஸ்ய	,,	௩	௬	,,	௪	,,

சந்தா விவரம்.

		இந்தியாவிற்கு.			இலங்கைக்கு.		
ஸூ	1 - இ	1	12	0	2	4	0
௸	6 - இ	1	0	0	1	4	0
௸	3 - இ	0	9	0	0	10	0
காபி	1 - இ	0	3	6	0	4	0

விஷயா:	ப்ருஷ்டஸங்க்யா
ஸம்ஸ்க்ருதபாஷா (ஸந்தர்ப்ப:)	௬௫
மதம் தத்ப்ரயோஜநம் தத்ப்ரவர்த்தகஶ்ச (ஸந்தர்ப்ப:)	௭௰
ஆத்மா ஶரீரஞ்ச (ஸந்தர்ப்ப:)	௭௧
ஸ்த்ரீவித்யா (பூர்வஸ்மாதநுஸந்தர்ப்ப:)	௭௩
பத்ரிகாப்ரேஷகாநாமுபதேஶம்,	௭௫
ஶக்தி:	௭௭
கிம் ஜகத் - அஸத்? உத ஸத்?	௭௮
பத்ரிகாப்ரேஷகேப்யோ விஜ்ஞாபநம்	௮௰

விஷயங்கள்	பக்கம்
ஸம்ஸ்கிருதபாஷை [தொடர்ச்சி]	௬௫
மதமும், அதின் பிரயோசனமும், அதின் ஆசிரியரும். [தொடர்ச்சி]	௭௰
ஆத்மாவும், சரீரமும். [தொடர்ச்சி]	௭௧
பெண்கல்வி [தொடர்ச்சி]	௭௩
கடிதம் எழுதுவோர்க்கு அறிக்கை.	௭௫
சத்தி.	௭௭
உலகம் அசத்தா? சத்தா?	௭௮

இஃது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ்தலைவரால் பதிப்பித்து வெளியிடப்பட்டது.

விளம்பரம்.

இதனால் சகலருக்கு மறிவிப்பதியாதெனில், வருமுறைதொட்டு இப்பத்திரிகையின்கண் அநேககையொப்பக்காரர்களது கேட்டுக்கொள்ளுதலின் பேரில் சிற்சில வுலகவிருத்தாந்தங்களடங்கிய விடயங்களும் சேர்த்துப் போடப்படும்- ஆனதுகொண்டதற்கிணங்கிய விஷயங்களைச் சந்தாதாரர்க ளெழுதியனுப்பிக்கலாம்- இப்பத்திரிகையின் கண்ணுள விரண்டுபாஷைகளில் எப்பாஷையிலனுப்பினும் அப்பாஷையிலேயே அவை போடப்படும்- ப்ரம்மவித்தையென்னும் பெயர்கொண்டே பிரமஞானப்பயிர்ச்சிக்குரியதாய் நிற்குமிப்பத்திரிகையினிடையில் உலகவிஷயங்களைச் சேர்ப்பதுரியதல்லவெனவெண்ணி யிப்பத்திரிகையின் மேற்கடிதத்திலேயே பிரசுரம் செய்யப்போகின்றனம்- கையொப்பக்காரர்களின்றி மற்றெவர் எழுதியனுப்பினும் பின்புறத்தில் கூறியிருக்கும் வண்ணம் தகுந்த சார்ஜின்றி பிரசுரம் செய்யப்படா-

சந்தாவாயினும் சார்ஜாயினும் அனுப்புகிறவர்கள் லேபிலாயனுப்பினால் ரூ- க-க்கு அணா க-கமீஷனாயனுப்பவேண்டும்-

இங்ஙனம்

பட்டஸ்ரீ: [illegible]ாராயண சாஸ்திரிகள்

பத்திராதிபப் பிரதிநிதி

ப்ரம்மவித்தியா பத்திரிகை

பிரதி இங்கிலீஷ்மீ ௰.உ சிதம்பரத்திலிருந்து பிரசுரம் செய்யப்படும்.

புத்தகம் - ௪.] ௧௮௮௯ - ஸ் அக்டோபர்மீ ௰ - உ. [இலக்கம் - ௫

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா

ஸம்ஸ்கிருதபாஷை. [தொடர்ச்சி.]

ஸ்மிருதியும், தர்மமும்.

நாம் முன் சொல்லிய நூற்களின் பெயர் ஸ்மிருதிகள். வேதங்களெல்லாவற்றையும் கேட்டவர் அவற்றை நினைத்து எழுதியதுகொண்டு "ஸ்மிருதி" என்னும் பதத்தால் அதைச் சொல்வது உசிதம். [ஸ்மிரு- வடமொழிப்பகுதி. நினைத்தல் எனப் பொருள்படும்.] நினைக்கப்பட்டது ஸ்மிருதம்; என வழங்கவேண்டியது ஆயினும், நினைப்பு எனப் பொருள் கொடுக்கும் ஸ்மிருதி என்னும் பதம் இங்கு ஆகுபெயராய் நின்றது. இத்தருமநூற்கள் அவ்வவ்வருணங்களுக்குரிய தர்மங்களைக்கொண்டு, அதை அனுஷ்டிக்கும் ஒவ்வொருவர்க்கும் சித்தத்தைச் சுத்திசெய்து பேரானந்தமடைய நல்வழிகாட்டும் கருவியாய் நின்றுள்ளன. அவ்வண்ணமே உலகநடை நிறைவேறவேண்டி தாயம், தானம், தண்டம் முதலிய பற்பல விஷயங்களும் இவற்றிலுள்ளனவே. அசத்தான கருமங்களுக்குக் கடுமையான பிராயச்சித்தங்களைக்காட்டி அவற்றில் மனஞ்செல்லவொட்டாது மறுப்பனவும் இவையே. ஆதலினால், இம்மிருதிகளின் வகுப்புகள் ஆசாரம், விவகாரம், பிராயச்சித்தம் என மூன்று. இம்மூவகுப்புக்களுடன் இம்மிருதிகள் இப்பரதகண்டத்தில் நீடூழி நிலைபெற்று நமது தேசத்திற்கும் நமது பாஷைக்கும் ஓர் அலங்காரமாய் நின்றுள்ளன. அவை [illegible]காலத்துக்கேற்றபடி தருமங்கள் வெகுவாய்ச் சொல்லப்[illegible]டுள்ளனவென்று தக்கபடி மாற்றுவது கூடாது. ஏனெனில், இத்தேசத்திலுள்ள எல்லாவித ஆத்திக வைதிகர்களும், இவை ஒரே மாதிரி ஒவ்வொரு கற்பங்களில் அவதரித்த அதிகாரபுருஷர்களாற் சொல்லப்பட்டனவென்று சொல்லுகின்றனர். அவ்வாறே பராசர் "அங்ஙனமே மனு ஒவ்வொரு கற்பங்களிலும் சோல்வர்" என்று மொழிந்தனர். அது பிரமாணங்களைப் பார்க்குமிடத்து காலம் வேறுபடினும் அவற்றுள் சிலவற்றைச் சேர்க்கவாவது குறைக்கவாவது கூடாது என்பது நன்கு விளங்கும்.

[illegible]

இக்காலத்தவரும் நன்கு வேதங்கள் நான்கையும் ஓதி அவற்றின் பொருட்களை நன்றாக ஆராய்ந்து ஒவ்வொரு தர்மங்களை தான் செய்பவருமாய் முற்காலத்துதித்த முனிவர்களொப்பாவரேல், அவர்கள்கூடி ஒருவேளை மாற்றமுயலின் முயற்சி பயன்படும். இது இக்காலத்திற் சிறிதேனும் முடியாதென வறிக. இதுநிற்க. இவ்விதமின்றி, சிலர் அந்த ஸ்மிருதிகளிலுள்ள தர்மங்களை நன்கு விளக்கும் வேதமுதலியவற்றையறியாது சிற்சில காவியங்களைப் படித்து கீர்வாண வாசனையற்ற கூட்டங்களில் ஸர்வஞ்ஞர்களாய் அபிநயித்து அத்தருமநூற்களை மாற்றிச் சிலவற்றை நீக்கவும், சிலவற்றைச் சேர்க்கவும் முயன்று, அவற்றிற்குத் தடை சொல்லியும் நமது முன்னோர் இயற்றிய நூற்களை தத்துவ ஆராய்ச்சி நிரம்பியனவென வுரைத்தும், எவ்விதமும் அத்தருமநூற்களையே முன்னுக்குக் கொண்டுவரமுயலும் மற்றவரை அவமதித்துத் தற்கால நாகரீகம் ஒன்றையே பார்த்து இந்த ஸ்மிருதிகளை மாற்றுவரேல் நமக்கும் நமது மதம் ஜாதி முதலியவற்றிற்கும் கெடுதி மிகச்சம்பவிக்கும். கலிகாலத்தில் தருமங் குன்றியதென்றால் அவ்வதர்மம் தருமசாஸ்திரங்களுக்கும் ஒத்தது எனச் செய்வது மிகக் கொடியதல்லவா? அப்பாவத் தொழில்களைச் செய்யும் பலரிடமும் அவர் செய்வதற்குத் தக்க வேறு காரணங்களிருப்பினும் உலகநடையறிந்தவர் அது விஷயத்தில் சிறிதேனும் கருணைசெய்யார். உலகத்தில் ஏழ்மையினால் ஒருவன் பிறர்பொருளைக் கைக்கொண்டால் அவனை அரசர் விடுவரோ? இதுவும் நிற்க. நாம் நம்மாலியன்றமட்டில் இச்சுருதிகளையும் ஸ்மிருதிகளையும் வரைகெடாது காக்கவேண்டியதுமன்றி, அவற்றை முற்றிலும் விடாது அநுஷ்டானத்திற் கொண்டுவரக்கூடிய முயற்சியெடுக்கவேண்டியது ஆவசியகம். நம்மவர்க்கு ஆசாரங்கெட்டால் மற்றெவ்விதமான ஸம்ஸ்காரமும் பயன்படா. அதுகொண்டே "ஆசாரத்தை விட்டு வேதங்களனைத்தையுங் கற்கினும் அவனிடம் அவை பயன்படா" என்று வேதங்களிற் கூறியதுகாண்க. தருமம் என்பது "பொறாமையற்று விருப்பம் நீக்கி வித்தையில் உழைத்த பெரியோர் ஒப்பியதும், தன் மனம் களிக்குந்தன்மையுள்ளதுமே தருமமென்றறிக" என்று மனுவின் வசனத்தாற் கூறப்பட்டுள்ளதே. இம்மனு வசனத்திற்கண்ட வித்தையென்னும் சொல் இம்மிருதிகளின் மூலமான வேதவித்தையேயொழிய மற்றொன்றல்லவென்றறிக. ஸ்மிருதிகளின் உண்மையையறிய தெரிந்துகொள்ளவேண்டியது அதுவேயாதலால், ஸ்மிருதிகளுக்கு வேதங்களே மூலம் என்பதிற் சிறிதேனும் சம்சயமில்லை. அதுகொண்டே சங்கர் "வேதத்தை மூலமாய்க்கொண்டனவே ஸ்மிருதிகள்" என்றும், மனுமுனிவர் "முன்னர் வேதங்களைக்கற்றுப் பின்பு ஸ்மிருதிகளை ரிஷிகள் எழுதுகிறார்கள். ஆதலால், இவ்விரண்டும் முதநூலும் வழிநூலுமாம்" என்றும் நன்கு விளக்கினர். இவ்வகை ஸ்மிருதிகளை இயற்றினோர் ஆதிகாரிகர். அவர்களுள் வேதத்தில் "மனு எடுத்துரைத்தது மருந்து" என்றிருப்பதால், அவர் ஆதிகாரிகர் என்று துணிதல் பொருந்தும். அதுகொண்டே மற்றவரும் அப்படியென்றும் ஊகிக்கப் பொருந்தும். இவைகளெல்லாம் வேதமூலமாய் வெளிவந்தபோதிலும் பிரத்தியக்ஷமாய்ப் படிக்கப்படும் வேதங்களிலுள்ள வசனங்களுக்கு விரோதமாயிருந்தால் அவ்விடத்து அவைகள் பிரமா

[illegible]

[illegible]

[illegible]

ணங்களாகா; அப்பிரமாணங்களெனில், முற்றிலும் அப்பிரமாணங்களல்ல. சில அதிகாரிகளை நோக்கிய பிரமாணங்களே. "ஸ்மிருதியில் அல்லது புராணத்தில் வேதவிருத்தமான பாகமிருப்பின் அது தாந்திரிகம்,, என்னும் வசனப்படிக்குத்தாந்திரிகர்களை நோக்கி அது எழுதப்பட்டதாய் அறியவேண்டியது. உலகத்தில் எல்லோருக்கும் தருமஞ்சொல்லப்புகுந்த இந்நூற்களுக்கு அப்படியிருப்பதும் அழகே. அதில் தருமம் சத்துக்கள் ஒப்பத்தக்கது. அங்ஙனமில்லாதது அதர்மம் என்று இலக்கணங் கூறப்பட்டது. அங்ஙனம் ஆபஸ்தம்பர் தர்மவிலக்கணமுரைத்தனர். "எவ்விதம் செய்யின் பெரியோர் புகழ்வரோ அதுவே தர்மம்; எதை வெறுப்பரோ அதுவே அதர்மம்.,, இவ்விடத்துப் பெரியோரெனப்படுபவர் வேதங்களையறிந்த வித்துவான்களே. அங்ஙனமே "நான்கு பெயர்கள் அல்லது மூன்றுபெயர்கள் வேதங்களைக் கற்றவராயின் அவர் எதைச்சொல்வரோ அதுவே தர்மம்; மற்றவர் ஆயிரம்பெயராயினும் அவர் சொல் பயன்படா,, என்று மற்றோரிடத்துக் காணப்படுவதால் நல்ல வைதிகர்களில்லாத பெருங்கூட்டம் இவைகளைமாற்ற வல்லமையற்றதெனக் கொள்ளலாச்சுது. இத்தருமம் செழிக்கவேண்டி, அதைப் பெருக்கப் பலகாரணங்களை யாஞ்ஞவல்கிய முனிவர் குறித்தனர் அஃதெங்ஙனமெனில் "தேசம், காலம், உபாயம், சிரத்தையுடன்கூடிய திரவியம், பாத்திரத்தில் தானம் இவை சேர்ந்து தர்மவிலக்கணம்,, எனப்படும். இவற்றுள் தேசம் குருக்ஷேத்திரந் தொடங்கிய க்ஷேத்திரங்கள்; காலம் சந்திரகிரகணம் சூரியகிரகணம் முதலியன; உபாயம் சாஸ்திரங்களிற்சொன்ன தருமவழி; பஞ்சகவ்வியம் முதலியன திரவியம்; சிரத்தையென்பது ஆத்திகம்; அதாவது கடவுள் உண்டென்னுந்துணிவு. சற்பாத்திரதானம். இவ்வைந்துவகைகளாலும்தருமத்தைபெருக்கி உலகத்தை அநுசரித்துத் தன் வருணத்துக்குரிய தர்மங்களைச் செய்பவன் பேரானந்தமடையக் கருவிகளாய் இவைநின்றுள்ளன. இம்மிருதிகள் வேதங்களுக்கடுத்த பிரமாணங்களாய் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன. இவைகள் நிரம்பியிருப்பதும் இப்பாஷைக்கு ஓர் பேராபரணமென்பது திண்ணம்.

புராணம்

புராணமென்பது முன்னரே நாம் கூறிய பதினெண் வித்தைகளில் ஒன்றும், இப்பாரதகண்டத்திலுள்ள வைதிகர்கள் அனைவராலும் ஒருமனதாய் வேதங்களைப் பொருள்செய்யக் கருவியென ஒப்புக்கொள்ளப்பட்டதுமானது. அதனிலக்கணம் சிருஷ்டி, ஸம்ஹாரம், வம்சகிரமம், மனுவந்தரங்களின் சரித்திரம், வமிசசரித்திரம் முதலிய பலவிஷயங்களைச்சொல்லித் தத்துவத்தை நன்கு விளக்கும் நூல் என்பது. இப்புராணங்கள் சுருதி ஸ்மிருதிகளைப்போல ஏதேனும் ஒருவிஷயத்தைத்தானே விதிப்பதுமில்லை; விலக்குவதுமில்லை. பற்பல சரித்திரங்களின் வாயிலாக வேதங்களின் உண்மையான கருத்தை வெளியிட்டு விதி விலக்குகளைக் காட்டுவன. வேதங்கள் பலவாயுள்ளனவும், அவற்றைப் பொருட்படுத்த மீமாஞ்சைமுதலிய கருவிகள் வேண்டியும், அவற்றைக் கற்க ஆயுள்பலமும் மதிநுட்பமும் மிக வேண்டுமெனக்கருதி, மந்தாதிகாரிகட்கும் தத்துவம் எளிதில் விளங்கப் புராணங்கள் பரமகிருபாநிதியாய

[illegible]

பரமனு லியற்றப்பட்டன என்று பல ரிஷிகளின் கருத்து. "குறைந்த அறிவுடைய ஒருவனைக்கண்ட வேதம் நம்மை இவன் வேறு பொருள்படுத்திக் கெடுப்பான் என்று நடுங்கும்; அப்படிக்கெடுக்காது இதிகாசங்களையும் புராணங்களையும் துணை நூலாய்க்கொண்டு வேதங்களைப் பொருள்படுத்துக,, என்று இவ்வாறு எழுதியிருப்பதால் விளங்குகின்றது. அப்புராணங்கள் அநேகமாதலால் அவற்றின் சொரூபம் சிலது இவ்விடமுரைப்பாம். இப்புராணங்களை ஆதிகாலத்தில் வேதங்களுடன் கூடவே பகவான் பிரமதேவனுக்குக் கட்டளையிட்டருளினர். அவர் பின்பு உலகத்தைச் சிருஷ்டிக்க எத்தனித்து முதலில் புராணங்களை நினைத்தார்; பின்பு தரும சாஸ்திரங்களையும் வேதங்களையும் நினைத்துப்பார்த்தார் என்பதுகொண்டு, பிரமன் முதலில் மற்றவருக்கு வெளியிட்டானதலால் இதற்குப் பிராமம் என்கிற பெயர் ஒன்று கிடைத்தது. அவற்றின் கிரந்த சங்கியை ௱-கோடிகள். பின்பு அவ்வளவு பருத்த புஸ்தகத்தைப் படிக்க ஜனங்களுக்கு வலிமைகுன்றியதைக் கண்டு ஒவ்வொரு கற்ப சரித்திரங்களுடைய ஒவ்வொரு புராணத்தைப் பிரமன் முதலிய பதினெண்முனிவர் ஒருகோடி கிரந்தத்தாற் சங்கிரகித்து வெளியிட்டுவந்தனர். பின்பு அதையும் கற்பது அரிதெனக்கருதிக் கருணைக்கடலாய வாதராயணமுனிவர் நாலுலக்ஷங் கிரந்தங்களாக்கிப் பதினெண்புராணங்களாய் வெளியிட்டார். இவ்விஷயம் மாச்சியத்திலும் மற்றைய புராணங்களிலுமுள்ளது. [[illegible]) என்றும் ([illegible]) என்றும் [illegible]) என்றும் சாண்க. இக்காலத்துள்ள புராணங்கள் கஅ. அவையாவன பிராமம், பாதுமம், வைணவம், சைவம், பாகவதம், பவிஷியம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரமகைவர்தம், இலிங்கம், வராகம், ஸ்காந்தம், வாமனம், கூர்மம், மாச்சியம், காருடம், பிரமாண்டம் என்பன. இவைகளிற் பல வேறுபாடுகளுள்ளனவென்று சிலர் சொல்வதுண்டு. நாம் ஒருவிதத்திலும் இவற்றுள் தோஷங்களுண்டெனச் சொல்லோம். இதுவிஷயம் எதிர்வாதிகள் இருதிறத்தார் சிலர் சொல்வது. ஒன்றுக்கொன்று விரோதமாய பல சரித்திரங்களையும், பல தேவதைகளின் பெருமையையும் வெளியிடும் இப்புராணங்கள் முற்றிலும் பிரமாணங்களாகாவென்பார். மற்றும் சிலர் தமக்குவேண்டிய சிலவற்றைப் பிரமாணங்களெனக்கொண்டு, மற்றவை அப்பிரமாணமெனக் கொண்டுவருவார்கள். இவ்விருதிறத்தார் வாதங்களையும் நன்

[illegible]

கு விளக்கிப் பின்பு எல்லாப் புராணங்களையும் பிரமாணமாய்க் கொள்ளும்வழியும்; அதற்கேற்றபிரமாணங்களும் எடுத்துக்காட்டுவோம். இவர்களில் முதல்வகுப்பு பிரதிவாதிகள் சொல்வது:—இப்புராணங்களை இயற்றினோர் சில அந்தணர்களே; வயிற்றுப்பிழைப்புக்கென வியற்றினரென்றறியக்கூடும். ஏனெனில், இதிற் பலவிடத்தில் பிராமணபூசையே எழுதியிருப்பதன்றி வேறொன்றுமில்லை. இவற்றையியற்றினோர் வாதராயணமுனிவராவரேல் அவர் இப்படிச் செய்வாரா? மற்றும், இதிற் பலவிடத்துத் தத்துவங்களைப் பற்றியும் வெகு அதிவாதங்களுடன் எழுதப்பட்டுள்ளன. அவை வருமாறுகாண்க.

காந்தம், வைணவம், பாகவதம் முதலிய புராணங்களிற் பூகோளம், வானசாஸ்திரங்கள் இவைகள் எழுதியிருப்பது முற்றிலும் ஆராய்ச்சிக்கு விரோதமாயிருப்பதுமன்றிச் சிறிதேனும் சர்வமுமறிந்த முனிவர் எழுதியதாய் நம்ப இடங்கொடுக்கமாட்டாது. மற்றும், ஒவ்வோரிடத்து ஒவ்வொரு தேவதைகளை அதாவது பிரமன், விண்டு, உருத்திரன் இவர்களுள் ஒவ்வொருவரை மற்றொருவர் உண்டாக்கினதாயும், அவர் மற்றவருக்கு அடங்கி அவரை வழிபடுவோரென்றும் முன்பின் விரோதமாய் எழுதியிருப்பதும், ஒவ்வொரு கர்மங்களைப்பற்றிச் சொல்லும்பொழுது அக்கர்மம் ஒன்றே மனிதர்க்கு முத்தியளிக்குமெனக்கூறி, மற்றக் கருமத்தைச் சொல்லும்வழி இக்கருமம்போன்ற கருமம் உலகத்திலில்லை, இதுவே எல்லாவற்றிலும் சிறந்தது எனவும் தாறுமாறுயுள்ளதும் காணலாம். அநேகமாய்ச் சரித்திரங்களும் ஒரு புராணத்திற் கண்டபடி மற்றொரு புராணத்திற் காணப்படுவதில்லையாதலால், உண்மை விளக்கத் தோன்றினவல்லவென்பது திண்ணம். இதுகொண்டே நமது முன்னோர்களிற் சிலரும் புராணங்களைவிட்டு வேதவாக்கியங்களாலேதான் தத்துவம் வெளியாகுமென்றுரைத்தனர். ஆதல்கொண்டே வேதத்திலும் "அப்பொருளை அருமறைமொழிகளால் அந்தணர்கள் அறியவிரும்புவார்கள்" என்றும் "வேதவாக்கியங்களாற்றான் அப்பொருள் அறியற்பாலது" எனவும் பல வசனங்களுள. ஆகையால், நாம் புராணங்களை முற்றிலும் நம்புவது எப்படி என்பது. மற்றவரோ, முற்றிலும் புராணங்கள் அப்பிரமாணங்களெனச் சொல்வது எவ்விதத்திலும் பொருந்தாது. புராணங்கள் ஐந்தாம்வேதங்களுக்கு ஒப்பானவையென்று சாந்தோக்கியோபநிடதமுதலிய உபநிடதங்களிற் கூறியதுபற்றி அவற்றை அப்பிரமாணமெனக் கொண்டால் நாம் வேறொருவழியிலும் வேதங்களைப் பொருள்படுத்தத்தகுந்த கருவிகளைக் கண்டெடுப்பது அரிதாய்விடும். அதுகொண்டே வேதவியாசமுனிவர்கோமான் தாமருளிய பாரதமுதலியவற்றிலும் புராணங்களைக்கொண்டே வேதார்த்தங்களைபுணரவேண்டுமென்றார். அற்றேல், முன்புகூறிய குற்றங்களுக்கு எப்படி வழிவிடுவீர்களெனின் கூறுவாம்.

எவ்விடங்களிலும் அந்தணர்களையாராதிக்கவே எழுதியிருப்பது உண்மையாயினும், அது அவர்களிடம் அநேக மந்திர சம்ஸ்காரங்களும், பல வித்தைகளும், வத்துநிலைகாட்டுங் கருவிகளும் இருந்தமையால், அவற்றையறிந்துகாப்பாற்றிய பெரியோர்களை நாம் எப்பொழுதும் பூஜிக்கவேண்டியது நமது கடமையென்று வித்தையிலுள்ள பெருமைப்பொருத்து. அவ்விதமகிமை அவரிடம் புராணங்கள் கூறியதுகொண்டு அப்புராணங்கள் எவரோ எழுதிவிட்டாரென்று சொல்லக்கூடாது. ஆனு

[illegible]

[illegible]

ல், தத்துவங்களை நன்கு ஆராய்ந்து அவற்றில் யாவரும் சரசமாய்த் தங்கள் மனதைச்செலுத்தவும், தீமைகளினின்று விலக்கவும் தாமே நல்ல பரிபாகமடைந்த சித்தத்தைக் கொண்டிருப்பரேல், அவர்களுக்கு உள்ளதுள்ளபடி சொல்லக்கூடும். அப்படிக்கில்லாவிடத்து அவரவர்கொண்டவழியெல்லாம் முற்றிலும் கெடுதலென்றும், தாம் சொல்லப்போகிற வஸ்துவொன்றே நிச்சயமென்றும் சிலபுகழ்மொழிகளாற்சொல்லி, எவ்விதத்திலும் அவரவர்க்கு விதிவிலக்குகளைமாத்திரம் வெளியிடுவதே அப்புராணங்களின் கருத்தன்றி வேறில்லை. புராணங்களில் பூகோளம், வானசாஸ்திரம் முதலிய விஷயங்களைக்குறித்துத் தத்துவ ஆராய்ச்சிக்கு முற்றிலும்விரோதமாயெழுதப்பட்டது மில்லை. அதுவிஷயத்தைப்பற்றிப் பின்பு விரிப்பாம்.

இப்புராணங்களிலே தேவதைகளில் ஒன்றிற்கு மற்றொன்று பெரிதெனவும், மற்றோரிடத்து மற்றொன்றிற்கு மற்றொன்று பெரிதெனவுங் கூறியதை உண்மைநோக்கி ஊக்கத்துடன் பார்க்கின் நல்ல தாற்பரியத்தையே கொடுக்கும். அஃதெங்ஙனமெனில், இப்புராணங்களில் சாத்துவீகம், ராசதம், தாமதம் என மூவகுப்புக்களுண்டென்றும், அவற்றுள் சாத்துவீக புராணம் முற்றிலும் பிரமாணமென்றும், மற்றவை சாத்துவிகபுராணத்துடன் முரணுதவிடம் பிரமாணமாமெனவும், இவ்விதங் கொள்ளல் இன்றியமையாது எனவும், அதற்குப் பல பிரமாணங்களும் உள எனவும் கூறுவர். அவர் சொல்லும் பிரமாணங்களையும், அவற்றை மறுக்கும் வழியையும் வரக்காண்க.

இன்னும் வரும்.

மதமும், அதின் பிரயோசனமும், அதின் ஆசிரியரும்.

[தொடர்ச்சி]

தற்காலத்தில் அவ்வாசிரியமணியாய சங்கராசாரியஸ்வாமிகளின் சரித்திரத்தை விளக்கும் புஸ்தகங்கள் பலவுள. அவை வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வித்துவான்களால் எழுதப்பட்டன. அவற்றுள் சில ஒற்றுமைப்பட்டும் சில அவ்விதமில்லாமலு மிருப்பதாய்ப் பலர் கொள்கையுண்டு. அவற்றைவிலக்க அதுவிஷயத்தில் நாம் அறிந்தமட்டில் தக்க காரணங்களால் அச்சரித்திரங்களின் உண்மையான ஸ்வரூபத்தைச் சற்றே இங்கு விளக்குவாம்.

ஆதியில் இவ்வாசிரியமணி யவதரித்தகாலத்தில் அவரது திருவவதாரஸ்தலமாய மலையாளநாட்டிலே அவ்விடத்துப் பிராமணரொருவரால், "கேரளசங்கரவிஜயம்,, என்கிற சங்கரவிஜயம் ஒன்று எழுதப்பட்டுள்ளது. அங்ஙனமே அவரது சிஷ்யர்களுள் ஒருவர் எழுதியது[[illegible]] பெருஞ்சங்கரவிஜயம் என்பது. அதை அனுசரித்துச் சிறிதுகாலஞ்சென்றவதரித்த வித்தியாரணியமுனிவரென்று வழங்கப்படும் மாதவாசாரியசுவாமிகள் எழுதியது மாதவீயம் எனவும், வியாசாசலீயம் எனவும வழங்கிவருகின்றது. மற்றும் அவ்வாசிரியன் திருமரபிலுதித்த மற்றொரு துறவிமணி தமது மாணுக்கர்மனங்களிக்க ஸ்ரீமத்சங்கராசாரியசுவாமிகளது திவ்வியதிருவிளையாடல்களைச் சேர்த்தெடுத்து[[illegible]] சங்கரவிஜயவிலாசம் எனப் பெயர்கொடுத்து, ஓர் புஸ்தகம் எழுதியிருக்கின்றனர். அதன்பின்பு தென்னுட்டிலுதித்துப் பல காவியங்களியற்றிய பண்டிதசிரேஷ்டரான ஸ்ரீமான் ஸ்ரீராஜசூடாமணிதீக்ஷிதரென்பவர் [[illegible]] சங்கராப்பி

[illegible]

[illegible]

[illegible]

யுதயம் என்கிற ஓர் சிறு காவியம் எழுதியிருக்கின்றார். பின்பு அனந்தானந்தகிரி என்கிற ஒருவரும் தாம் கண்டதும் கேட்டதுமாய்ச்சிலவற்றைச்சேர்த்து ஓர் சரித்திரமெழுதியிருக்கிறார். பிறகு அதி சமீபகாலத்திலெழுதிய மணிமஞ்சரிபேதினி என்கிற ஓர் கிரந்தத்திலும் அவர் சரித்திரம் காணப்படுகின்றது. மேலும், இப்பொழுது இவற்றையெல்லாமாராய்ந்து சென்னையில் சர்வகலாசாலையில் தெலுங்குபாஷைப்பண்டிதர் எழுதிய கிரந்தமும் ஒன்றுண்டு. இவைகளை ஆராயுங்கால், இவற்றுள் அனந்தானந்தகிரீயம் என்கிற சங்கரவிஜயம் ஒன்றுநீங்க மற்றெல்லாம் ஒருவாய்கொண்டிருப்பதால், சரித்திரவிஷயங்களில் நாம் அவைகளை யனுசரித்து இங்கெழுதியது. அவ்வனந்தானந்தகிரீயமென்பது இவ்வாசாரியரியற்றிய அத்துவிதசித்தாந்த நிலைமைமுற்றிலும் அறியாதவரும், வேறு மதஸ்தரும் எவ்விதமும் இவரைத் தூஷிக்கவெண்டுமென்கிற துரபிப்பிராயங்கொண்டவருமாய் அப்புஸ்தகத்தைப் பார்க்குமளவிற் புலப்படுமாதலால், அது இவ்வாசிரியன் சரித்திரத்தை இத்திறமெனச் சொல்லும்வழியை மறுக்கத்தக்க வல்லமையற்றதென்பது திண்ணம். இதுவிஷயம் வேண்டிய விவரங்கள் பத்திரிகைவாயிலாகக்கேட்பின் விடையளிக்க யாதொருதடையுமில்லை. அவர்கள் தாம் ஆராதித்துவந்தது "சந்திரமௌளீசுவரர்,, என்கிற ஓரிலிங்கமும், "இரத்தினசர்ப்பகணபதி,, என்கிற ஓர்கணபதிபிம்பமுமாம். அவ்விரண்டுபிம்பங்கள் அவரது சீஷர்களின் குலமாய ஸ்ரீசிங்கேரி சமஸ்தானத்தில் வைத்துப் பூசிக்கப்பட்டுவருவதாய்த் தகுந்த காரணங்களால் நம்புகிறோம். அவர் சீஷர்களில் நான்குபெயர் அத்துவிதமதாசாரிய பரம்பரையிற் சேர்ந்தவர். அவர்களின் பெயர் சுரேசுரர், பதுமபாதர், ஹஸ்தாமலகர், தோடகாசாரியர் என்பார்கள். முறையே இவர்களின் சரித்திரங்களைப்பற்றிச் சிறிதுவிசிப்பாம்.

இன்னும் வரும்.

ஆத்மாவும், சரீரமும்.

[தொடர்ச்சி]

க0. "அணுவாய ஆத்மா இப்பெரிய சரீரத்தை எவ்விதம் நடத்தும்?' இக்கேள்வியின் கருத்து. ஆத்மாவோ அணுவாயுள்ளது; சரீரமோ பருத்தது; இவ்விரண்டிற்குமோ சிறிதேனும் சம்பந்தங்கிடையாது. ஆதலால் நாம் உலகத்திற்கண்டபடி அணுவான [அதாவது நுட்பமான] பொருள் பருத்த [அதாவது தன்னிலும் அதிக அளவினையுடையதாய] இவ்வுடலைநடத்தும் சக்தியை எவ்விதம் அடையுமென்பது. இதுகேள்வியிற்சேருவதேகூடாது. ஏனெனில், கண்கூடாகப்பார்ப்பதில் தன்னிலும் எத்தனையோ மடங்குள்ள கப்பல் முதலிய சருவிகளை நடத்தும் மாலுமியை நாம் அறிவோமல்லவா? அவ்விடம் அம்மரக்கலத்தினளவினும் அம்மாலுமி அளவு சிறிதாதலால் அவன் அதை நடத்த வலிமையுடையானல்லவென்று வினவெழும்புமோ? உலகத்தில் மூட்டைதூக்கு மவர்களுக்குக்கூடத் தன்னிலும் பருத்த அளவினையுடைய வஸ்துவை நடத்தத் தனக்கு வலிமையுள்ளது தெரிந்தவிஷயமே.

கக. "ஆத்மா சரீரத்தின் வேறுமாயின் குழந்தைகளறிவிற்கும் முதியோரறிவிற்கும் வேறுபாட்டுக்குக் காரணம் யாது?,, இதின் கொள்கை வருமாறு காண்க. அவ்வான்மா சரீரத்தின் வேறும், மனம் அணுவாயும், அதற்கு எக்காலமும் குறைவு

[illegible]

(௰௨) [illegible]

முதலிய விகாரமற்றதாயு மிருக்குமேல் பிராணவாயுவும் அதின்வசமாயுளதாதலால் சரீரம் இளமைப்பருவமாயிருந்தாலென்ன? முதிர்ந்திருந்தாலென்ன? எவ்விதமேனு மொருவிதமாயல்லவோ ஜீவனது அறிவு வெளிப்படவேண்டும்? அங்ஙனமோ அனுபவமில்லை. குழந்தைகளுக்கும், நடுப்பருவமுள்ளவர்க்கும், முதியோருக்கும் அறிவு ஒருவிதமாயிருப்பதில்லையே. அதுகொண்டே நாம் சரீரத்தின் உறுப்புக்களிலொன்றான மூளையின் குணமே முற்றிலும் புத்தியென்று சொல்வது. ஆத்மா சரீரமேயாதலால் அதின் இளமை முதுமைகளை யனுசரித்தறிவது உசிதமாகுமென்பதே. ஐயா! உடலின் இளமை முதுமைகளை அறிவு அனுசரிப்பதென்று நன்குரைத்தீர்; இதுகொண்டே அறியுந்தன்மை சரீரத்தினது ஓர் பாகத்தின் குணமாய்முடியாது நாம் முன்னரே ஆன்மாவின் சொரூபமான அறிவு தன்னைத்தவிர்த்து மற்றொன்றையும் தனித்துக் கவராதென்றும், மனமுதலிய கருவிகளைத் துணையாய்க்கொண்டே ஒரு பொருளைக் கவருமென்றும் எடுத்துரைத்தோமல்லவா? அங்ஙனமாதல்பற்றி மனம் நடுவிற் சிலகாலம் ஓய்ந்திருந்தமையால் அது திரும்பவும் தன் சுபாவமடையச் சிறிதுகாலம் வேண்டியது அவசியமே. அங்ஙனமே முதுமையிலுந் தினந்தோறும் நித்திரைகாலத்தி லுண்டாவதுபோல ஓய்வுண்டாவதறிக. வெளிப்புலன்களும் தக்கபரிபாகமடையாதவையாதலால் அநேக விஷயங்களுடன்கூடியும் அவ்விஷயங்களைக்கவருஞ் சக்தியற்றனவாயிருக்கின்றன. "பரிபக்குவமாகாக்கலயம் தண்ணீரைத் தரிக்காது" என்பதுபோல் என்று துணிவாய் நம்புக. அதே கலயம் பரிபாகமடைந்தாலல்லவா தண்ணீரைத் தன்னுள்வைக்கத்தக்க சக்தியையடையும்; அவ்வாறு நமது சரீரத்திற்கும் அநேககாலம் சூரியகிரணமுதலியவற்றின் சம்பந்தத்தாற் பாகமுண்டாகுமல்லவா? அப்படியே அனுபவமு முண்டு. அஃதெங்ஙனமெனில், குழந்தைகளது மண்டையோட்டிற் கைவைத்தால் மெதுவாயிருப்பது காலஞ்சென்றாற் கல்லினும் மேலாகும்வழி நாம் கண்டுள்ளதல்லவா? அன்றியும் முதுகெலும்பு இளமையில் அநேக துண்டுகளாய்நின்று காலஞ்சென்றால் அநேகமாயொன்றுபடுவதும் வழக்கமாய்க்கண்டுள்ளதன்றோ? அதுகொண்டு இளமையில் அநேக துணைக்கருவிகள் பாகமாகாததினால் வேண்டிய வேலைகளில் அவைகளையேவுதற்குச் சக்தியற்ற அவ்வாத்மா சரீரத்தின் இளமை முதுமைகளையும் எதிர்பார்க்கவேண்டியது அவசியமன்றோ? மனமும் முதுமையில் ஓய்வடையுமாதலால் நினைவு குன்றிவருதல் உசிதமே. சரீரம், ஜீவன், மனம், பிராணன் ஆகிய இவற்றில் வேற்றுமையிருப்பினும் சரீரத்தையனுசரித்து ஜீவன், அறிவு முதலியன விளங்குவது உசிதமேயாகும்.

௧௨. "சரீரத்தின் வேறாய் ஜீவனுள்ளதாய் அனுபவமும், விவகாரமுமுண்டா?" இக்கேள்விக்கு விடை. நான் குள்ளம் நான் உயரம் என்று தொடங்கிய பலவிவகாரங்களால் சரீரமும், ஜீவனும் ஒன்றாய்ப்புலப்படுவதால், எவ்விதம் அவ்வான்மா சரீரத்தின்வேறாய் எப்பிரமாணத்தாலாவது கொள்ளற்பாலது என்பதேயாம். விவகாரம் அனுபவத்தையொட்டியேயுள்ளது. இவ்விடத்திலோ விவகாரம் இருவகைப்பட்டது. நான் கறுப்பு, நான் சிவப்பு என்பதுபோல் எனது சரீரம் என்பதுமுண்டு. இதுவும் நீர் எடுத்துக்காட்டிய சரீரவுறுப்புக்களிலொன்றான மூளையைப்பற்றியதென்பதும் எனது மூளை என்று வழங்குவ

[illegible]

[illegible]

தால் அங்ஙனம் சொல்லப்பொருந்தாது. ஆயினும் எனதாத்மா என்கிற விவகாரத்தால் ஆத்மாவிலும் வேறாய ஓர் வஸ்து வே நான் என்னும் பதப்பொருளாய் முடியும் என்பது கூடாது. இவ்விரு பொருட்களை மாற்றிச் சரீரத்தைப் பொருளாய்க் கொண்டு நான் கறுப்பு என்று தொடங்கிய விவகாரங்களும், எனது ஆத்மா என்கிற விவகாரங்களும், ஆத்மாவை அவ்விதங் கொண்டு எனது சரீரம், நான் அறிவேன் என்று தொடங்கிய விவகாரங்களும் ஒவ்வுமாதலால், அவ்விரண்டினும் வேறாய் ஒருபொருள் சித்தித்தல் ஒருபொழுதும் கூடாதுபற்றி, யாம் கூறிய அனுபவத்திற்குச் சிறிதேனும் தடையில்லை.

௧௩. "அது சரீரத்தின் வேறாயிருக்கவேண்டியது அவசியமா?" ௧௪. "அது அழிவற்றதா?" இவ்விரு வினாக்களில் முதல் வினாவுக்கு விடை. நாம் முன்னுரைத்தபடி அறிவானது சரீரத்தின் ஓர் பாகமான மூளை முதலியவற்றின் குணமாகச் சித்தித்தல் கூடாது பற்றி அவ்வறிவினிடமாய் ஜீவன்வேறாய்த் துணியப்பட்டான். அவன் நித்தியனென்றே கொள்ளல் வேண்டும்; அங்ஙனமின்றி அநித்தியனாயின் அவன் உண்டாதல், நசித்தல் இரண்டிற்கும் காரணம் வேண்டும்; உண்டாவதோ முற்றிலும் பொருந்தாது. நாம் முன் செய்த உபந்நியாஸங்களால் அறிவானது ஒரு பௌதிகத்திலும் சேராது பற்றியும், அவ்வறிவு மற்றொன்றின் பிரிவாகச் சொல்லுதல் கூடாது பற்றியும் நாம் அவ்வஸ்துவை அழிவற்றதெனச் சொல்லத்துணிந்தோம். இங்கு காட்டிய பல காரணங்களால் ஆத்மா சரீரத்தின் வேறென்றும், அச்சரீரத்தினிடமே யிருந்து அதை நடத்த வலிமை பெற்றதென்றும் துணியப்பட்டது.

பெண்கல்வி

[32வது பக்கத் தொடர்ச்சி]

வித்தையும் இவர் சுபாவமும் சேரும் என்பதை நோக்குழி, நெருப்பும், காற்றும் சேருவதுபோல் என்பதற்குச் சந்தேகமுண்டோ? அவர்களுக்குப் பாலியத்திற் கற்பிக்கவேண்டி வீட்டு வேலைகளைத்தவிர்த்து, மற்றப்படி பள்ளிகளுக்குப் போவது என்கிற ஓர் காரணமாத்திரத்தால்தான் கண்டபடி திரிவது உசிதம் அல்லவே. எவ்வளவு படிப்பினும் வீட்டிற் செய்யவேண்டிய வேலைகள் எவ்விதம் மனதிற்படும். மனையாட்டி என்பவள் மனை ஆளும் தன்மை பெற்றவள் அல்லவா? இப்பெண்கள் கன்னிப் பருவத்தில் கலைகளனைத்தையும் கற்றுக் கணவனகம் சென்று, அவன் வீட்டிற் செய்யவேண்டிய சங்கதியாதுமறியாது தனது நாயகனுக்கு மாத்திரம் இன்பந்தரவல்லவளாயினும், தேகசங்கதிக்குத்தக்க சுகம்கொடுக்க அவள் அறியாததினால் ஆடவர்க்கு ஆறாத்துயரம் தருவாளல்லவா? அதுகொண்டே பெரியோர் பெண்கள் படித்தலொழிக்க ஏவினர் என்பது சிலர் கொள்கை. இது விஷயம் நாம் கொடுக்கும் விடையிது. ஐயா நீர் உரைத்தபடி அவர்கள் சுபாவம் என்றும் சபலமுள்ளதென்பது உள்ளதேயாயினும், அதற்கு நீர் செய்யும் ஓர் வகைக்கட்டுப்பாடு [அதாவது எவ்விதம் வெளிவிடாது சிறையில்வைத்ததுபோல் வீட்டுள் வைத்துக்காத்தல்] ஒன்றே அவர்கள் சுபாவத்தை மாற்ற யாங்ஙனம் வல்லமை பெறும்? அதுகொண்டே ஸ்ரீ மனுமுனிவர் [ஆடவரா லகத்திற்கட்டுண்ட பெண்களல்ல ரக்ஷிக்கப்பட்டவர்கள்; தன் விவேகத்

[illegible]

கொண்டு தன்னைத்தான் ஆளும் மங்கையே ரக்ஷிக்கப்பட்டவள்] என்று கூறியது காண்க. ஆதலால், தாங்கள் எடுத்துரைத்த குற்றங்களில் முதற்கூறிய சுபாவகுற்றம் மறுக்கப்பட்டது. பின்னும் படிப்பு சுதந்திரத்தை விருத்தி செய்யும் அவர்களுக்கு அது முற்றிலும் உரித்தல்லவென்றும், அது வேண்டுவதில்லையென்றும், அங்ஙனங் கொள்ளின் குற்றங்கள் பல உண்டாகும் என்றும் எடுத்துக்காட்டினீர்கள். அது விஷயம் ஆடவரிடமும் யோசிக்கக்கூடும். ஏனெனில், கல்வி எவ்விடமும் கொழுப்பையும் சுதந்திரத்தையும் தராது. அவ்விஷயத்திற்கும் அதிகாரிகளுண்டு. யாங்ஙனமெனில், ஆடவர்களிடத்திலும், நல்லோரிடத்து வித்தையால் லோகோபகாரங் கிடைக்கும், தீயோரிடமுள்ள கல்வி தீதாகவே முடியும் என்பது கண் கூடாகக் கண்டதே. ஆதல் கொண்டே ஆன்றோர் "தீயோரிடத்துள்ள வித்தையால் விவாதமும், தனத்தால் மதமும், நுண்ணறிவால் பலரைக் கெடுத்தலும் ஆகிய இவைகளே விளையும். பெரியோரிடத்து வித்தை தேசாபிமான முதலிய அபிமானத்தையும், திரவியம் உசிதமாய் தேசம், காலம், பாத்திரம் அறிந்து தானத்தையும், நுண்ணறிவு பிறரைக்காத்தலும் ஆகிய இவைகளையே விளைவிக்கும்." என உரைத்திருக்கின்றனர். ஆகையால், வித்தை சுதந்திரத்தைப் பெருக்கும் எனக்கொண்டு பயனுள்ளதாய பெண்கள் கல்வியை விலக்க முடியாது. நீர் கூறியுள்ள காரணத்தின் படி படிப்பானது ஆடவர்களுக்குமே கூடாதென்றுரைக்க ஏன் இடங்கொடாது? ஆதல்கொண்டே குக்கிராமங்களில் வசிக்கும் எழுத்து வாசனையற்றுக் கையெழுத்துக்குக் கடன்வாங்கும் கனவான்கள் இப்பொழுதும் சில சமயங்களில் "படித்தவன் தான் படுகுழியில் விழுவான்,, என்று ஓர் பழமொழி வழங்குவது வழக்கம். அவர் போன்ற போலிஜனங்கள் போர் போராய் மறுப்பினும் நமது தாற்பரியந் தடைப்படாது. நாமும் எவ்விதத்திலும் பெண்களுக்கு இளமையில் நமது கடமைகளைக் கற்பிக்கவேண்டுமெனச் சொல்ல வந்தோமன்றிச் சித்தந் தோன்றியவாறு வெளியில் விடும்படி சொல்ல வந்தோமில்லை. அப்படிச் செய்வது நமக்கும் அநேக குற்றங்களுக்கு இடமாகுமென்பதிற் சிறிதேனும் தடையில்லை. இவர்கள் படிப்பு ஓர் அளவையிலகப்பட்டதொழியப் புருடர்கள் படிப்பதுபோல் ஒவ்வொரு சங்கதியிலும் நன்கு பயின்றிருக்கவேண்டிய தவசியமெனத் தோற்றவில்லை. பெரியோர் தருமநூற்களிற் பெண்கள் கல்வியைப் பற்றி விதிவிலக்குகள் நன்றாக விளக்காதுபோனபோதிலும், நல்லொழுக்கமுடைய ஓர் மங்கைமணி செய்யவேண்டிய தருமங்கள் அவாவும் இன்றியமையாத சில பாகங்களைமட்டில் கைத்தொழிற் காரரைப்போலக் கற்கவேண்டியதே அவசியம். அவர்களுக்குரிய கடமைகளை ஸ்ரீமான் மனு "திரவியத்தின் வரவு செலவுகளில் பெண்களையே ஏற்படுத்துக,, என்றும், வியாசர் "நல்லுருவம் நற்பருவம் அடையினும் சங்கீதம், நிருத்தியம் முதல் அறிந்திருப்பினும், தனக்குத் தக்கவனென்று தன் கணவனையே வழிபடுவாளன்றி வேறொருவனைச் சித்தத்திலும் வையாள்,, என்று தொடங்கி "தருமகாரியத்தில் அனுகூலமும், பொருள்விஷயத்தில் பிடித்தமும்,, என்று சிற்சில ஸ்திரீகளினுடைய குணங்களை எடுத்து "வீட்டிற்கு வேண்டிய சாமான்களைச் சேர்ப்பதிலும் மற்ற விஷயத்திலும் தக்க வலிமை பெற்றிருப்பது பெண்களுக்கிலக்கணம்,, என்றும், அங்ஙனமே

[illegible]

பத்ரிகா:

[illegible]

[illegible]

ஆர்யா:!

[illegible]

''நற்குணங்களுடன் தானியமுதலியவற்றைக் காப்பாற்றியும், வீடுகளை அலங்கரித்தும் பெரியோர் குழந்தைகள் சிநேகிதர்கள், பந்துக்கள், வேலைக்காரர்கள் இவர்களுக்கு முறையே ஆசனம், போசனம், கொடை, சம்மானம், நல்வார்த்தைகளைச் சொல்லல் முதலிய வற்றில் வல்லமை அடைந்திருத்தல் வேண்டும்,, என்றும், ''வீட்டின்காரியங்கள் நிறைவேறக்கணவன் கொடுக்கும் திரவியத்தில் காரியத்தையும் முடித்துத்தன் ஊக்கத்தால் சிலவற்றை மிச்சம் வைக்க வலிமையுடையவளே மங்கைகளில் சிறந்தவள்,, என்றும், இன்னும் பற்பலவிலக்கணங்கள் கூறியிருக்கின்றனர். அவ்விதமே தக்கன் என்பவரும் ''தனதுபெண்டீர் அனுகூலமாயிருப்பின் அதுவே சுர்கம்,, என்று பிறகும் (தமது கடமைகளையறிந்து, கணவர் சொற்கிசைந்து, அவர்மனம்போல் நடப்பவளே மனைவி) என்று நன்கு அவரிலக்கணங்களை விளக்கினர். மனு முனிவரும் அவர்களைப்புகழ்ந்து (மனைகட்கணி மனைவிகளே) என்றார். இவ்வாறு எழும்பும் அநேக வசனங்களாலும், அவர்களின் தருமத்தில் (குழந்தைகளைப் பெற்றெடுத்து அவைகளைப்பரிபாலனம் செயல்) என்றெழுதியிருப்பதாலும், இவர்களுக்கு வீட்டின் சாமான்களைச்சேர்த்தலும்,குழந்தைகளை இரக்ஷித்தலும்,வரவு செலவு நடத்தலும், தேவர்,பெரியோர், அக்கினி இவர்களைப் பூசித்தலும், கணவன்மேனியுபசரித்தலும், தானியமுதலியவற்றைக்காத்தலும், தன்கற்பைத்தானே காப்பாற்றிக் கொள்வதும், இன்னும்அநேகம் தர்மங்களாகப் புலப்படுவனவாதலால் அவைகளுக்குப்பகுத்தறிவு இன்றியமையாதுகொண்டும், அவ்வறிவு பெரியோருபதேசித்தாலன்றி சித்தியாதுபற்றியும் அவர்களுக்கு வேண்டிய வித்தை வேதம் முதலிய நூற்களல்ல. முன்னரே வீட்டில் உள்ள தாய், மாமி முதலிய பெரியோர்களிடம் பெரியோர் வழிமாறாது வரும் தருமங்களைக்கற்றுக்கொள்வதே அவர்களுக்கு வித்தை. அவற்றிற்கின்றியமையாத எழுத்து முதலியவற்றை யமன் கூறியசங்கியாசினீதர்மத்தால் ''தகப்பன், அல்லது அவனுடன் பிறந்தவன், உடன்பிறந்தவன் அல்லது மற்ற எவரும் படிப்பிக்கக்கூடாது' என்கிற வசனத்தால் வீட்டிலே செய்யவேண்டியதே உசிதம் எனபது சாத்திரங்களின் கருத்து. இவ்விதம்செய்யாது அவர்களுக்கு முற்றிலும் சுதந்திரம் கொடுப்பதில் சிறிதேனும் குற்றம்இல்லையெனச்சொல்ல நமது நாத்துணியாது. இக்காலத்திலோ காலகொடுமையால் ''ஆங்கிலேயர்செய்வதே ஆன்றோர்ஆசாரம்'' ஆயிற்றாதலால் நாம் உரைப்பது மற்றவர் கேட்கினும்கேட்காமற்போயினும் ''எவ்விதம் ஜனங்களுக்கறிந்த மட்டிலும் ஹிதம் சொல்லுக,, என்கிற விதியைக்கொண்டு நாம் அறிந்தமட்டில் சுருக்கி இங்ஙனம் வரைந்தோம்.

கடிதங்கள்.

கடிதக்காரர் அபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

கடிதம் எழுதுவோர்க்கு அறிக்கை.

ஸம்ஸ்கிருதத்தில் அல்லது தமிழில், ஒருவர் தூஷணமின்றி தருமம், வருணாச்சிரமம், உலகசங்கதிகள் முதலியவற்றைக் குறிக்கத்தக்கனவும், எளியநடை யுள்ளனவுமாய் எழுதவேண்

[illegible]

டியது. ஒரேபாஷையில் எழுதியிருந்தாலும் மற்றொன்று அதற்கிணை சேர்க்கப்படும்.

ஐயா!

நமது தேசத்திலுள்ள மதங்கள், வருணாச்சிரமங்கள், அவற்றின் தருமங்கள் இவைகளை எவ்விதத்திலும் முன்னுக்குக்கொண்டுவர வல்லவா இப்பத்திரிகை எழும்பியது? இது இப்பத்திரிகையைப்படிக்கும் எல்லோர்க்குந்தெரியுமே. இப்பொழுதோ நமது மதங்கள் எல்லாவற்றிற்கும் ஓர் பெரிய கேடு சம்பவித்து வளர்ந்துவருகின்றது. அதாவது "நாத்திகம் ஓங்குதலும் கிரிஸ்துவம் தழைப்பதுமே," அவ்விரண்டு உபத்திரவத்தின் நடுவில் நாம் உள்மதங்களைக்கொண்டு சண்டை செய்து காலத்தை வீணில் கழிப்போமானால் எவ்விதமும் நமது மதம் சீக்கிரம் ஒழிந்துபோவதற்குச்சிறிதேனும் ஐயமில்லை. அவர்கள் நமக்குள் வேறுபாட்டையே வேண்டுகிறார்கள். நமக்குள் நாம் வேறுபட்டு ஒருவர்க்கொருவர் தூஷிப்போமானால் இதைக்கேட்டு இருவரையும்தூஷித்து தன்வழிப்படாமரரைச்சேர்க்கஅவர்கள் முயல்வது நாம் கண்டிருக்கின்றதே. முற்றிலும் தத்துவத்தை ஒளித்தால் நமது சாஸ்திரங்களில் தத்துவமேயில்லையென்கிறார்கள். இவ்வகை அரையறிவுகொண்டு அறிஞர்களாய்ப் பாவிக்கும் சிலர்களுக்கு முழுதும் காட்டாமலும், முழுதும் மறைக்காமலும் கற்பிக்கவேண்டியது அவசியம். அதுகொண்டே சன்மதங்களின் உண்மைகளைத்திரட்டி இங்கு எழுதிவருகிறோம். அவற்றுள், நாம் கண்டிக்கவேண்டியதாய்க்கொண்டதும், குற்றங்கள் நிறைந்ததுமானது நாத்திகம் முதலிய சில மதங்களே. அவர்களையும் முற்றிலும் மறுக்க இங்கு எழுந்தோமல்லம். அவர்களுக்கும் நமது மதத்தின் நல்ல அபிப்பிராயங்களை வெளியிடவே என்றறிக. அங்ஙனமே செய்யவேண்டியது இந்துக்களின் கடமை. அதுகொண்டே மதங்களைப்பற்றி நாம் பிறரைத் தூஷியாது எழுதி வருகிறோம். இங்ஙனமிருக்க சில காலத்திற்குமுன் "வேலூர்ஜனநுகூலனி," என்னும் பத்திரிகையில் ஓர் வைணவருக்குப் பதில் உரைக்கப்புகுந்து தாறுமாறாய் மற்றையமதஸ்தரைத்தூஷித்தெழுதும் "நன்மைவிரும்பி," என்கிற ஒருவரைப்பார்த்தேன். அவரால் தூஷிக்கப்பட்ட பிரதிவாதி நம்மிடம் அக்குற்றங்களை மாற்றிக் கொள்ளவேண்டி "துதர்க்காசலதலிசம்," என்கிற ஓர் கடிதம் எழுத அதை நாம் முன் பத்திரிகையில் வெளியிட்டோம். அதுகண்டு ஏதோ ஒருவர் கையெழுத்தில்லாத ஒரு கடிதம் எழுதி, அதில் அத்துவித மதத்தை மனம்போனபடிதூஷித்தார். ஆனால் அதுவே அவருக்குள்ள கேவலமதாபிமானத்தையும் பிறர் சுபாவமறியாத்தன்மையையும் தம்மதங்களை மற்றொருவர் புகழின் அது நமது மதத்திற்குத் தூஷணமென்றெண்ணி அவர் எழுதிய பிரமாணங்களுக்கும் பதிலெழுதச் சக்தியற்றவரென்பதையும் வெளியிடும். இல்லாவிடில் ஏன் அதற்குப் பதில் நமது பத்திரிகைக்கனுப்பார். அதுநிற்க. இனியாவது உள்மதங்களில் துவேஷத்தை விட்டு அத்துவிதம் முதலிய எல்லாமதஸ்தரும் அவ்வவ்மதங்களுக்குரியபடிஅதில் உள்ள உண்மைகளையும் மேன்மைகளையும் பிரயோஜனங்களையும்பற்றி எழுதவேண்டியது எழுதில் அவரவர் தாற்பரியம் மாறாது வெளியிடுவோம். ஆனால் சாஸ்திரிகள் மாத்திரம் அறிந்துகொள்ளத்தக்க பதமிருக்கக்கூடாது. ஆகையால் இவ்விஷயத்து சங்கியை யொழித்து வைதிகமான மதங்

[illegible]

களைமட்டில் மற்றவருக்குகோபமுண்டாகாவழிஎழுதுக- தன்மதத்தைப் புகழ்வதே பிறருக்குக் கோபம் என்றறிந்தொழியவேண்டாம்- உலகம் பலவிதமல்லவா? ஒருவர் எல்லாவற்றையும் சந்தோஷிக்கச் செய்வது மிகக்கடினம். "எவ்விதமும் தனக்கு ஹிதமே செய்து கொள்ளவேண்டும்; ஜனங்கள் பலவாறுரைப்பர் உலகமே யெல்லாம் சந்தோஷிக்கும் உபாயம் ஒன்றுமில்லை,, என்கிற ஆன்றோர் வசனத்தை ஆராய்ந்து நமக்கும் பிறர் அநேகருக்கும் சுகத்தையே நாம் விரும்பவேண்டும். பாருங்கள்! மதவழிபாராது ராஜாங்கவிஷயத்தை நன்கு விளக்கி இந்துக்களிலும் தமிழர்களுக்கின்றியமையாத தாய "சுதேசமித்திர ரத்தினத்திலும்,, அநேக பாமரர் ஆக்கிரகப்படுகிறார்கள். இனி வித்துவான்களுக்கு நாம் ஏதெடுத்துரைப்பது. ஆதலால் உள் மத துவேஷத்தை விடுங்கள்; மத தத்துவங்களை விளக்குங்கள்; நமது பத்திரிகைக் கெழுதுங்கள்; பிரமாணங்களுக்கொத்தமார்க்கத்தை அநுசரியுங்கள்.

பத்திராதிபர்

சத்தி.

சத்தியென்பது உலகின்கணுளதாய பொருளனைத்தினையுமாராயுங்கால் அவற்றின்றேற்றஞ் சத்தியின்கணன்றி வேறன்றென்க. சத்தியெனினும் ஆற்றலெனினும் வன்மையெனினுமொக்கும். அன்றாகலின் சத்தியென்ப தினைத்தென்று விவகரிப்பாம்:—

கட மண்ணினின்று மெழுகின்றதேனு நேர் மண்ணினின்று மெழுந்ததன்று. மண்ணினின்று மெழுந்ததுண்டேற் கடல், யாறு முதலன மண்ணினின்று முளதாகவேண்டும்; அங்ஙனமின்று. கடசத்தி யெய்திய மண்ணினின்றுந் தோன்றியதென்பது திண்ணம். அற்றாகலின் கடத்துக்குச் சத்தியே யுபாதானகாரணமென்க. ஆடைக்கு நூலும் பஞ்சுங் காரணமாக நிகழினும் நூல் யாங்ஙன நேர் காரணமாமோ அங்ஙனமே மண்ணுஞ் சத்தியுங் காரணமாக நிகழினுஞ் சத்தி நேர் காரணமென்பது தெற்றென் றுணர்க. அவ்வப் பொருட்கண்ணு நியதமாய சத்திகள் பலவுள. எவ்வெப்பொருளினு நியதசத்திகள் யாவையுளவாமோ அன்னவை யவ்வப்பொருளினின்று மெழுவது திண்ணம். அவையே காரியமெனப்படுமென்க.

இனி மண்ணினின்றுங் கடமுதலியன வெழுகின்றனவேயன்றிப் படமுதலியனவெழக் கண்டாமின்று. இங்ஙனமே யவ்வப்பொருளினின்றும் அன்னவற்றிற்கினமாய பொருள்களே தோன்றுகின்றன. அவ்வப்பொருள்கடோன்றற் குபாதானகாரணமாய சத்தி, கண்கூடா நிகழ்வதன்று. யாங்ஙனமெனின் சத்தன், சத்தி, காரிய மென்னுமிம்மூன்றனுள்ளுஞ் சத்தனுங் காரியமுங் கண்கூடாம் பகுதிய. சத்தியெனி னற்றன்று. காரியம் புறத்தே தோன்றுவழி சத்தியுளதெனக் கூறலொல்லாது. காரியந் தோற்றுஞான்றும் அங்ஙன மாகாஞான்றும் சத்தி, கண்கூடாகப் புலப்படுவ தெவ்வாற்றானு மியைந்திலதென்க. சித்திரிகன் சித்திரிக்குங்கால் சித்திரசத்தி யன்னோன்பாலதாகக் கொள்ளுநரன்றி வரையாவழி யங்ஙனங்கோடலமையுமோ? அன்றே. அற்றாகலின் காரியத்தானே காரணமினைத்தென் றியம்பற்பாலதென்க. காரியமாய புகை காணுதவழிக் காரணமாயதீ யுளதாகக் கூறுநருளரோ? அற்றன்றே. சித்திரிகன் சத்தன், சித்திரம் வரையுமாற்றல் சத்தி, சித்திரங் காரியம்; சித்திரம் வரையுஞான்றுஞ் சித்திரிகனுப சத்தனு

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

ம், அன்னேன் வரையுஞ் சித்திரமும் கண்கூடாக நிகழ்வதன்றிச் சத்தி கண்கூடன்று; கண்கூடாய காரியங்கொண்டு அங்ஙனமன்றாய காரணத்தைத் துணிவது அநுமானமென்பதாம்; புகையைக்கொண்டு தீயுளதெனக் கோடல் போன்றென்க. அன்னவற்றுள் மண், சத்தி, கடமென்பனவாய இம்மூன்றனுள்ளும் மண்ணுங் கடமுங் கண்கூடாயுள்ளன; சத்தியங்ஙனமன்று. காரியம் கடம்; காரணம் சத்தி. காரியமாய கடவாயிலாகக் காரணமாய சத்தி யுளதென்றனுமானிப்பது புகையுளவழித் தீயுளதாகக் கோடல் போன்றென்க.

இனி "கடமெனற்பாலது சத்தா? அசத்தா?" என்று காரியகாரண வாதத்தான் விவகரிக்குங்கால் யாண்டு மின்றென முடிந்த தாகலின் இது முடிந்தது முடித்தலென்னு முத்திக்கினமென்க. இனிக் கடமேயிலதாயவழி, சத்தியுளதென் றியாண்டைக்கூறலமையும்? புகையைக்காணுத வழித் தீயுண்டென்றி யாவர் கூறுவர்? கடத்தோற்ற முளதெனின் தோற்றம் பொருளென் றமையாதன்றே? தோற்றம் பொருளாங்கால் பனியின் றோற்றப்புகையும் பொருளாக, அதுகாரணமாய்த் தீயுளதெனக் கோடலமையுமன்றே? தோற்றப் புகையைக்கொண்டு தீயுளதெனக்கோடலெவ்வாற்று னியைந்திலதோ, அங்ஙனமே யுள்ளது போன்று தோற்றுங் கடத்தோற்றத்தைக் கொண்டு சத்தி யுளதெனக்கூற லெத்துணையு மியையாதென்க. சத்தாய கண்கூடாக் காண்டலான் சத்தாய அங்ஙனமன்மையை யுணர்வது அனுமானமாகலின், அசத்தாய கடத்தைக்கொண்டு சத்தாய சத்தியை யுணர்வது எத்துணையு மியையாதென்க. எதார்த்தவனுமானத்தான் பொருள் சித்தித்தலல்லது தோற்றவனுமானத்தா னெத்துணையுஞ் சித்தித்தலமையாதென்க. இஃது அனுமானத்தானய குற்றமேயாம். இதனானே கடமுஞ் சத்தியு மியாண்டு மில்லனவென்றே துணியப்பட்டனவென்க. இங்ஙனமே யொவ்வோர் பொருளையு மாராயுங்கால் சத்தியுங்காரியமுமில்லனவென்றே நிகழ்கினவன்றி யோர் பொருளினின்று மேனைய பொருள்கள் தோன்றுதலெனல் வாளாசழக்கேயென்க.

இந்து.

உலகம் அசத்தா? சத்தா?

இந்த சங்கையைப்பற்றி யாலோசிக்குமிடத்து, உலகத்தினது இலக்கணம் இன்னதென்றும், சத்தின் இலக்கணம் இன்னதென்றும், அசத்தின் இலக்கணம் இன்னதென்றும், முன்னம் வரையறுத்துப் பின் அவ்வுலகம் சத்தின் பாற் படத்தக்கதோ அல்லது அசத்தின் பாற் படத்தக்கதோவெனத் தருக்கித்துப் பாற்படுத்தல் வேண்டும். இங்ஙனம் செய்யாமல் சத்து அசத்துகளை மாத்திரம் நமக்குத்தோன்றிய மட்டும் ஒருவாறு வரையறுத்துவிட்டு, வரையறைப்படுத்தாத உலகத்தைச் சத்தென்றுவது அசத்தென்றுவது தீர்மானித்தலைக்காட்டினும் அந்தக நியாயம் வேறென்றுளதோ? நிலக்கரி உலோகமா? கல்லா? வென ஆசங்கைநிகழுழி, நிலக்கரி இன்னதென்றும், உலோகம் இன்னதென்றும், கல் இன்னதென்றும் இலக்ஷணசித்தப்பட்டாலன்று இதன் இலக்கணம் இதனோடு பொருத்தம். ஆதலால் அனுதருமசம்பந்த வாற்றலால் இது இதுவேயாம், அதுவாகாது என்று துணிதல்கூடும்.

1886௵ ஆகஸ்டு௴ 23உ மித்திரனில் வெளியாகிய இந்து

[illegible]

வைப்போலாது, நாம் உலகம் இன்னதென்றும், சத்து இன்னதென்றும், அசத்து இன்னதென்றும் முன்னம் வரையறுத்துப், பின் உலகம் சத்தென்றும் அசத்தென்றும் தீர்மானிப்பாம்.

உலகம், அல்லது வஸ்து அல்லது பூதியம் என்பது தனக்கென ஓர் சொருபமின்றி முக்காலத்துநிசமு மெல்லாச்சொருபங்களுந் தாமாய் குருத்துவம், இபக்கம், ஆகருஷணம், திரிவு முதலிய வற்றை அபின்னமாயாண்டுமுடைய உண்மைப்பொருள். இதுவே சத்தென்றும் சொல்லப்படும்.

இந்த சத்தினுடைய அபாவமே அசத்தாதலாலும், அசத்து யாண்டு மிலதாதலாலும், இல் பொருளுக்கு இலக்கணமுமின்றென்க.

ஆதலால் உலகம் சத்தின்பாற்படுமேயல்லாது சத்திற்குச் சர்வ விரோதமாகிய அசத்தின் பாற்படாது.

ஆனால் மேற்சொன்ன பத்திரிகையில் உலகம் அசத்து என்று காட்டிய ஸ்ரீமான் இந்துவின் நியாயம் போலியோவென்னின் முக்காலும் போலியே. அதை ஈண்டுகாட்டுவாம்.

இவ்விந்து "சத்துயாண்டு முள்ளது" என்று கூறினரேயல்லது அது இதுவென்று காட்டினரில்லை. சத்துக்கு உதாரணமாகப் படத்தைக்கூறினலோவெனின், படம் யாண்டு முள்ளதா? படம் காரணமா? காரியமா? காரியமெனின், இவர் கூறிய கடநாஸ்தி நியாயமே இவருக்கு விரோதமாகின்றது. படத்தை வியவகாரிகமாய்க் கூறியதேயல்லாமல் பாரமார்த்திகசத்திற்கு அன்று எனின், யாண்டுமுள்ளது பாரமார்த்திக சத்தா? வியவகாரியசத்தா! பாரமார்த்திகசத்தெனின், இலக்கணங்கூறியது ஒன்றற்கும் எடுத்துக்காட்டியது ஒன்றுமாகின்றமையால் பாம்புகடிக்குத் தேள்விஷந்தீருமருந்தளித்தது போலன்றோ இருக்கின்றது. 'அசத்து யாண்டுமிலது' என்று கூறிப், பின்னர்காட்சியைக் காணப்படு பொருளாகவும், சொல்லைப் பொருளாகவும், காட்சி, சொல், ஆகிய இவ்விரண்டையும் பொருளாகவும் மயங்கி உதாரணங் கூறியுள்ளார். இலக்ஷணமெல்லாம் அவற்றையேற்றுள்ள இலக்ஷியப்பொருளுக்கேயல்லாமல், இல் பொருளுக்கன்றே. இல் பொருளுக்கு உதாரணம் பகர்ந்தது என்ன பயனைக்கருதியோ? மேலும் இவ்வாதி உற்பத்திக்கும் உருமாற்றத்திற்கும் பேதமுணராமல் மயங்கி வாதாடுகின்றார். உற்பத்தியாவதுமுதற்காரணமில்லாமல் உண்டாவது. உற்பத்தியை வைதிகிகள் சிருஷ்டியென்றுங் கூறுவர் "இல்லது வாராது" என்ற நியாயம் இதற்கே பொருந்துமாதலால், இதற்கு உதாரணமும் கிடையாது. உருத்திரிதலாவது ஓர் உரு மற்றொருருவாயத்திரிதல். இதற்கு உதாரணம்கடமே. கடமென்பது ஓர்வகை உருவிற்குத் தமிழ் நாட்டார் சொற்சுருக்கமாய் வைத்துக்கொண்ட கற்பிதப்பெயரேயல்லது வேறல்ல. இந்தகடம் மண்ணாயிருந்தாலும் கடம்தான், பொன்னாயிருந்தாலும் கடம் தான், செம்பாயிருந்தாலுங் கடம்தான், பித்தளையாயிருந்தாலும் கடம்தான். கடஉருவம் மாறினும் வஸ்துவாகிய மண், பொன், செம்பு, பித்தளை இவைகள் மாறவும் மாறா, அழியவும் அழியா. ஆதலால்தான் 'உள்ளது போகாது' என்னும் நியாயமும் இதற்கே பொருந்தும்.

இன்னும் இவர்கூறிய சத்து அசத்துக்களின் லக்ஷணவியாப்தி தோஷங்களைப்பற்றி விசாரிப்பாம். சத்துக்கு அசத்து சர்வ விரோதமாயின், இவர் சொன்ன இலக்கணங்களில் வியாப்தி தோஷமின்று. சர்வவிரோதமல்லாக்கால், வியாப்திதோஷம்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

கூறுதேயமையும். ஆதலால் அவ்விலக்கணங்கள் சர்வவிரோதமா அல்லது வேறுவிரோதமா வென்பதனை நியாயசாத்திரப்பிரமாணத்தால் விளக்கிக்காட்டுவாம்.—

விரோதம் சர்வவிரோதமென்றும், சம்பவவிரோதமென்றும், பாரிசேடவிரோதமென்றும், சகளவிரோதமென்றும் நான்குவகைப்படும். இவற்றுள்,

1. சர்வவிரோதம்	யாண்டுமுள்ளது சத்து ஓர்போதும் இல்லது அசத்து
2. சம்பவவிரோதம்	யாண்டுமுள்ளது சத்து சிலபோதுள்ளது சத்து
3. பாரிசேடவிரோதம்	யாண்டுமுள்ளது சத்து யாண்டுமில்லது அசத்து
4. சகளவிரோதம்	சிலபோதுள்ளது சத்து சிலபோதில்லது அசத்து

மேலே இவர்கூறிய இலக்கணப்படி சத்துக்கும் அசத்துக்கும் உள்ளவிரோதம் சிறப்பாந்தன்மையினதாகிய சர்வவிரோதத்துளடங்காமல் சிறப்பின்மையாகிய பாரிசேடவிரோதத்துளடங்குகின்றமையால், அசத்திற்குக்கூறிய போலி இலக்கணத்தில் வியாப்திதோஷமுண்டாகின்றது. இவ்வியாப்திதோஷத்தை நையாயித்துக்காட்டுவாம்.

எது அசத்தோ அதுயாண்டுமில்லது.
கடம் அசத்து என்றதனால்
கடம் யாண்டுமில்லது.

வனைந்ததற்குப்பின்னும் அழிவுபாட்டிற்கு முன்னும் கடமுண்டாதலால் கடம் யாண்டுமில்லதாய் எங்ஙனமாகும்? கடம் யாண்டுமில்லதல்லாதபோது அசத்தெப்படியாகும்? கடம் யாண்டு முள்ளதுமல்லவாதலால் சத்தும் அன்று. இவர் கூறிய இலக்கணப்படி கடம் சத்தும் ஆகாமல் அசத்தும் ஆகாமல் சங்கரசங்கேதநிலையில் நிற்கின்றது, ஆதலால் இவர்கூறிய அசத்திலக்கணத்தோடு இவரதுதாரணமே முரண்படுகின்றது. உலகத்திலே நையாயிதரெல்லாரும் ஒன்றைக்காரணமென்றும் மற்றொன்றைக்காரியமென்றுங்குறிப்பது சொரூபத்தைநோக்கியேயல்லாமல் வஸ்துவை நோக்கியல்ல. வஸ்துவோ காரணத்திற்கும் காரியத்திற்கும் நியதமாயிருப்பது. மனோபாவனையால் காரணத்தை நோக்குழி காரியமும், காரியத்தை நோக்குழி காரணமும் இன்மையாய்க்காணப்படினும் இவ்விரண்டிற்கும் நியதமாயுள்ளது எதுவோ அது எக்காலத்தும் உள்ளதே; அதுவே சத்தென்பதும், வஸ்துவென்பதும், உலகமென்பதுமாதலால், உலகு அசத்தாதல் ஒருக்காலுமில்லை. இதனைச்சிந்தித்து இந்துவென்னப்பட்ட நமது நண்பர் பின் மறுமொழி பகர்வாராக.

ஹிதோபதேசி.

இங்ஙனம தத்துவவிவேசினி.

ப்ரம்மவித்தியா பத்திராதிபரவர்கள் சமுகத்திற்கு
ஐயா,—சென்ற செப்டம்பர்மீ 26உ தத்துவவிவேசினியினகண் ஹிதோபதேசியார் வரைந்திருக்கும் விஷயத்தை யிம்முறை தங்கள் பத்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டும். மறு பத்திரிகைக்கு அதன மறுப்பு வரைந்தனுப்புவாம்.

இந்து.

கடிதக்குறிப்பு

இந்து. தாமெழுதியபடி தத்துவவிவேசினியில் ஹிதோபதேசியார் வரைந்திருக்கும் விஷயத்தை இம்முறை பிரசுரித்திருக்கிறோம்.

பத்திராதிபர்

"தத்துவ விவேசினி"

இத்தலைப் பெயர்கொண்ட பத்திரிகை இச்சென்னையில் நெடுநாளாகப் பிரசுரஞ் செய்யப்பட்டு வருகின்றது. மதப்பித்தேறிய அனைவருடைய அஞ்ஞான இருளை ஓட்டச் சகோதரவாஞ்சையுடன் முயலாநிற்கின்றது. அப்பத்திரிகையொன்று உலவிவருவதனால் யாம் அனைவரும் இறும்பூதெய்தியிருந்தோம். இப்போது ஏழெட்டுமாசகாலமாக அதில் ஆங்கிலேய சாஸ்திர உணர்ச்சியும் ஆரியமதக்கோட்பாட்டின் ஞானமும் அணுவேனும் எய்தப்பெறாத சிலர் எழுதப்புகுந்து அதை மேதியிழிந்த தாமரைத்தடாகமாக்கிக் கெடுக்கின்றார்கள். அந்தோ, பரிதாபம்! பரிதாபம்!! அதுநிற்க. சென்றவாரப் பத்திரிகையிலுள்ள சிலவற்றை எடுத்துரைப்பாம். உண்மையென்னும் மணிவிளக்கினொளியால் நன்மையைக் கண்டுய்யவேண்டியதென்னும் எண்ணத்தை வாஸ்தவத்தில் எவராவது கொண்டிருந்தால், அவர் எவ்வெவ்விடங்களில் தமது கோட்பாட்டுக்கு விரோதமாக எதையாகிலும் எவரேனும் பிரசங்கிக்கின்றாரென்று கேள்வியுற்றமாத்திரத்தில் உடனே அவ்வவ்விடங்களிற் சென்று அவற்றைச் செவியாரக்கேட்டுத் தமக்குள்ள சந்தேகத்தை நேராகவேனும் பத்திரிகை மூலமாகவேனும் கேட்டறிந்து தெரிவது முறையாம். இதுதான் ஆராய்ச்சிசெய்வோரது இலக்கணம். அதைவிடுத்து "ஒரு பிரசங்கியார் இப்படியாகவும் அப்படியாகவும் சொன்னாராம்,, "அவர் சொன்னது அப்படியிருக்கலாம்,, "இப்படியாம் அப்படியாம்,, என்று யாரோ தனக்கு வந்து ஒன்றை மற்றொன்றாகக் குளறிவழிந்ததை நம்பி ஏ. எம். என்கிற ஒருவர் கைக்குவந்தபடியெல்லாம் எழுதித்தொலைத்தார். உண்மையில் ஆராய்ச்சிசெய்பவரது இலக்கணம் இப்படியா இருக்கும்? ஆரிய மதவிசாரணை சங்கத்தில் ஆரிய திராவிடபாஷைகளில் மஹாவித்துவான்களும் ஐரோப்பிய சாஸ்திரங்களில் மஹா நிபுணர்களும் ஒன்றுசேர்ந்து நியாயவாயிலாய்ச் சகோதர ஒற்றுமையுடன் தூஷணையையொழித்து லோகோபகாரமான உபந்நியாஸங்கள் செய்துவருவதை வாரந்தோறும்ஸம்மதத்தோரும் சம்மதமாகக்கொண்டு கேட்டு மகிழ்கின்றனர். மேலும் ஆங்கிலேய பாஷையிற் கல்வி பயின்று பி. ஏ. பட்டம்பெற்ற பல சாஸ்திர நிபுணர்களும் சிரக்கம்பஞ்செய்து சவாஸ் என மதிக்கின்றார்கள். அப்படியிருக்க "காடு வாவா வீடு போபோ,, என்னும் நிலைமைக்குவந்த கிழங்கள் நேரில்போய்க்கேட்கத் தயிரியமற்றவர்களாய் வாய்க்குவந்தபடி யெல்லாம் வரைந்து போதுபோக்காநிற்பர். அந்தோ யாவரும் வியக்கத்தக்க நிரீஸ்வரவாதிகள் கூட்டத்துக்கும் அவர்களுடைய அற்புதமான "தத்துவவிவேசினி,, என்னும் பத்திரிகைக்கும் கவுரவதோஷம் சம்பவிக்கின்றதே. ஆங்கிலேய சாஸ்திர உணர்ச்சியற்ற இப்படிப்பட்டவர்களுடைய சேர்க்கையால் மெய்யறிவு என்னும் சுவடியை எடுத்துக்கொண்டு அந்த ஏ. எம். என்பவர் அதின் வாக்கியங்களைக் கண்டிக்கச்சொல்லுகிறார். ஆராய்ச்சி என்னும் உண்மை நெறியில் நின்றுமான தபதார்த்த சொரூப லக்ஷணங்களை முழுதும் உணர்ந்து ஏதோ சிலகாரணத்தால் சிறிது மதிமயங்கிப்போன பென்தாம், ஹியூ, மில், வோல்டேர், ஸ்பென்ஸர், மிஸ்டர் பிராட்லா, டாக்டர் பேயின், ஆகிய மானிட சிரோன்மணிகளுடைய அற்புத புஸ்தகங்களை யெடுத்துக்கொண்டு ஒவ்வொரு அம்சத்திலுமுள்ள வழுக்களைக்காட்டி, அவற்றில் தேர்ச்சியடைந்து பெரிய பரீக்ஷைகள் கொடுத்த விவேகிகளும் "சரி,, என்று ஒப்புக்கொள்ளும்படியாக உபந்நியசித்துவருகிற ஓர்சபையில் "மாடமாளிகைகூடகோபுரங்களெல்லாம்பறக்கும்போது எச்சிற்கலை எனக்கென்னகெதி என்று கேட்டதுபோல் மெய்யறிவுப் போலிச்சுவடி முன் நிற்குமோ? அதிலுள்ள வழுக்களை எடுத்து நெடுநாள் முன்னரே பிரசித்தப்படுத்தி யிருப்போம். "ஊர்க்குருவி மீது இராமசரமா,, என்று பரதவித்தே சும்மா யிருந்துவிட்டோம். யாம் ஐந்து ஆறுமாச முன்னர் எம். ஏ. பட்டம்பெற்ற ஒரு சிறந்த கனவானிடத்து வார்த்தையாடிக் கொண்டிருந்தபோது இச்சிறு சுவடியை ஒருவர்கொண்டுவந்து அவர் கையில் கொடுத்தார். அது மெய்யறிவு முதல்பாகம். அதை அந்த கனவான் திறந்து பார்த்தபோது "பூதக்கண்ணாடியில்-தண்ணீரை நாம் பார்ப்போமானால் அதில் தேள் சிலந்தி முதலியது இருப்பதைக்காண்போம்,, என்று பொருள்படுகிற ஓர் பூதசாஸ்திர அபுக்த வாக்கியத்தைக் கண்ணுற்று "இவர்கண்ணுக்குச் சலத்தில் தேள் அகப்பட்டது விந்தையினும் விந்தை. அப்படிப்பட்ட பூதக்கண்ணாடியை யான் கேட்டதேயில்லை. இன்னுங்கொஞ்சம் ஏறாந்திருந்தால் தேளேயல்ல, கரடி, புலி, சிங்கம், யானையைக் கூடத்தான் கண்டதாகப் பொய் உரைப்பார்போலும். இங்கிலீஷ் சாஸ்திர உணர்ச்சியில்லாதவர்கள் ஏன் இந்தக் காரியங்களில் தலையிட்டுக்கொண்டு தங்கள் அறியாமையை வெளியிடுகிறார்கள்,, என்று துக்கித்து அதைத் திரஸ்கரித்தார். அதைக்கண்டும் அதின் உண்மையை யறிந்தும் அந்தச்சுவடியை ஓர் பொருட்படுத்தி விவேகிகள் விவகரிப்பார்களா? ஆயினும் அந்நூலாசிரியர் இரந்து கேட்டுக்கொள்வதினால் அவர்பொருட்டு யாம் கருணைகூர்ந்து, இன்னும் ஒருமாசத்தில் ஆரியமத விசாரணைசங்கத்தார் வெளியிடப்போகிற "ஆரியமதவிசாரணி,, என்கிற பத்திரிகையின் ஆரம்பத்திலேயே அவர்களுடைய அநுமதியினால் அவருக்கு வழுக்களைக்காட்டி அவர் மன இருளை ஓட்டி உண்மையை நாட்டுவிப்போம். அந்தோ அவர் மன இருளை ஓட்டுவது எங்ஙனம் இசையும்! அவர் கொண்டது விடாதவராக்கும். ஆரியமத விசாரணை சங்கத்தில் பிரசங்கம் ஆரம்பித்தநாள்தொடங்கி யாம் விடாது போய்க்கொண்டு வருகிறோம். நாஸ்திகர்களை நன்றாய்ப் பேசிப் புகழ்ந்து வாழ்த்தியும் அவர்களுடைய கோட்பாடுகள் அபாயகரமானதென்பதை விளக்கியும் தூஷணையை முற்றுமே ஒழித்துப்புலவர்கள் பிரசங்கிப்பதை நாஸ்திகக்கோட்பாட்டை யவலம்பித்திருக்கும் யாங்களும் புகழவிருக்கிறதே. அப்படியிருக்க "அவர் அப்படிசொன்னாராம்,, "இவர் இப்படி சொன்னாராம்,, "இது அப்படி இருக்கலாம்,, என்று ஐயந்திரிபற வுணரு மதியிலார் சொன்ன சொற்களையே நம்பித்தூஷித்து ஒழிவது உண்மையான ஆராய்ச்சியுடையாரது மரபன்று. யாரோ தனக்குச் சொன்னதாக ஏ. எம். வரைந்துளார். குண்டுணிகள் சொல்லில் இவ்வளவு நம்பிக்கை வைத்த சத்புருஷர் அநுபவக்கியானிகளாகிய ஆன்றோர் வசனத்தில் அதில் ஆயிரத்திலோர்பங்கு நம்பிக்கை வைத்தால் கடைத்தேறி உய்யலாமே. ஆரியமதவிசாரணைசங்கத்தில் உபந்நியாசஞ்செய்கிற விற்பனரை மூதறிஞர் மெச்சுகிறார்கள்.

ஏனையோர் புகழ்ந்தாலென்? அவமதிப்புமான்றமதிப்புமிகை மக்களான் மதிக்கற்பால்....

(நாலடியார்) அவ்விடத்தில் சொல்லப்பட்ட விஷயங்களின் சந்தர்ப்பாசந்தர்ப்பங்களை யறியாமல் கண்டபடி தூஷித்தெழுதுவது கற்றோர் இலக்கணமன்று.

இங்ஙனம்.

சி. இராசரத்தின முதலியார்.

பி. இரத்தின முதலியார்.

ஸ்ரீசுதேசாபிமானி

[illegible]

[illegible]

பத்திரிகையில்

விளம்பரமுதலியவை அச்சிடும்

கூலி விகிதம்-

வரி 1-இ முதல்முறை அச்சிட அணா-2. இரண்டாவது முறை அச்சிட அணா-1. பின்பு எத்தனைமுறை அச்சிடினும் அத்தனைமுறையும் வரி ஒன்றுக்கு அணா அரை.

விளம்பரமுதலியவைகள் பத்திரிகையின் மேற்காகிதத்திற்முன் போடப்படும்.

சிதம்பரம்

ப்ரம்மவித்தியா யந்திரசாலையில்

ஸம்ஸ்கிருதம் தமிழ் முதலியவைகளில் புத்தகங்கள், பிரசித்தபத்திரிகைகள், எக்ஸாமினேஷன் பேபர்கள், பில்லுகள் முதலிய பற்பலவித பதிப்புவேலைகளை வெகு நேர்த்தியாகவும், நயமாகவும் பதிப்பித்துக் கொடுக்கப்படும்.

இவ்விடத்தில் கமிஷன் விஷயமாய் புஸ்தகங்கள் வாங்கி விற்கப்படுமாதலால், விருப்பமுடையோர் தங்கள் புஸ்தகங்களை அனுப்பினால், விற்று ரூபா 1-இ கமிஷன் அணா 2. பிடித்துக்கொண்டு மற்றத் தொகையை சொந்தக்காரர்களுக்கு அனுப்பிவிடப்படும்.

பகவற்கிதார்த்த தீபிகை.

இப்புத்தகம் வடமொழியின்கணுள்ள வனுதியாய வுபநிடதசாரங்களடங்கியதும் முறைமுறைவகுத்த முனிமன்னராய வேதவியாசபகவானருளிய மாபாரதமெனும் புருடனதிருதயசமலம்போன்ற பதினெண்ணத்தியாயங்களடங்கியதும், பகவனுரைத்ததுபற்றிப் பகவற்கீதையெனும் பெயர்பெற்றிராநின்றதுமாய சிறந்தவோர் உபநிடதமும், அதற்கு மும்மதத்தாசிரியரருளிய பாடியங்களையநுசரித்து வரைந்திருக்கும் ஓர் செந்தமிழுரையுமுள்ளவோர் நூல். இதனை அந்நூலாசிரியராய கோயமுத்தூர் துப்புசாமிஐயரவர்கள்எமதிடம் அனுப்பியதன் பின்னர் யாமதனைப்பார்க்க இதுபோற்றெளிவாய தமிழ் நடையில் வடநூற்களை மொழிபெயர்க்கப் புலவருமுளரோவென வியப்புற்று இந்நூலையனைவரும் பார்த்து அதன் பொருட்களை நன்காராய்ந்து வருவது நம தாத்திகமதத்தி னபிவிருத்திக்குக் காரணமாகுமெனவெண்ணி இம்முறை இப்பத்திரிகையின்கண் பிரசுரிக்கலாயினோம். நமது முன்னாசிரியர் பாடியங்கள்கூட பரிசிரமமின்றித் தெளிவாயதன்பொருட்களை யிவ்வண்ண முணர்த்துவதரிதே. அதுபற்றி ஐயமறக் கற்றுக்கொள்ள விருப்புற்றவர்கட் கேனையோருரைகள் ஏலா. அதுபற்றி யவற்றைப்பற்றுவதும் சாதாரணர்க்கு வெறிதே. இப்புத்தகம் வேண்டுபவர்கள் கோயமுத்தூர் உ-வதுவகுப்பு வக்கீல் ம-ஈ-ஈ-ஸ்ரீ துப்புசாமி ஐயரவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்

கும்பகோணம், பட்டஸ்ரீ நாராயணசாஸ்திரிகள்,

பத்திராதிபப் பிரதிநிதி.

அஷ்டாங்கயோகம்.

இந்நூல் மனமதனை யடக்கவும், அணிமாதிசித்திகளை முடிக்கவும், தத்துவஞானம் பெறவும் துணைக்கருவியாயபதஞ்சலிசூத்திரம் யாக்ஞவல்கியம் முதலியவற்றிற் கூறியிருப்பவற்றை யாராய்ந்து தெளிவாய் துரைசாமி முதலியாரவர்களாலியற்றப்பட்டுளது. இதில் நாடிசுத்தி, அஷ்டாங்கங்கள் முதலியவை நன்றாய்ப் புலவர்கள் புகழும்வண்ணம் எழுதப்பட்டிருக்கின்றன.

இப்புத்தகம் வேண்டியவர்கள்சென்னபட்டணம் பெத்துநாய்க்கன்பேட்டை பிடாரியார்கோயில் வீதியில் 39-வது கதவிலக்கமுடைய வீட்டில், வே. துரைசாமிமுதலியாரிடததில் பெற்றுக்கொள்ளலாம்-

இதன் விலை அணா-ரு. மொத்தமாய் வாங்குவோர்கட்கு க0-க்கு க-ம் உடு-க்கு ங-மாக அதிகமாய்க் கொடுக்கப்படும்.

ஆச்சரிய தர்ப்பணம்.

இந்நூல் சுலபமாய் வேதாந்த சித்தாந்தங்களைக் கற்றுணரவிரும்புபவர்களுக்கென அதிக சங்கிரகமுமன்றி யதிகவிஸ்தாரமுமன்றி எழுதப்பட்டுளவோர் வேதாந்தநூல். இதின் கண் பற்பல வடநூற்களைக்கற்றுணர்ந்தறியக்கூடிய வரியபல விடயங்கள் தெளிவாய் சிரமமின்றித் தமிழ்ப்பாஷையில் திறமையுள்ளவர்களும் தெரிந்துகொள்ளலாம். ஆகையால் இது எல்லோருக்கும் பயனுள்ளது- இதின் விலை பிரதி-க க்கு- ரூபா 2 இது வேண்டியவர்கள் கோயமுத்தூர் ஜில்லா சப்கலெக்டராபீஸ் சிரஸ்த்தாரவர்கள் ம-ஈ-ஈ- ஸ்ரீ பொன்முடி வெங்கிடராமையரவர்களுக்கெழுதிப் பெற்றுக் கொள்ளலாம்- மிகவும் பயனுளது-